உருவாக்க இந்திய அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று இந்தப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இந்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒட்டு மொத்த தமிழர்களின் ஒருமித்த உணர்வோடு ஒருமுகமாக நிறைவேற்றப் பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை 14-27 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப் பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

58. சுற்றுலாப் பயணிகள் பேருந்துகளுக்கு அனைத்திந்திய அளவில் அனுமதி வழங்குவது குறித்து உள் (போ.6) துறையின் 31-1-1989-ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1939 ஆம் ஆண்டு இயக்கூர்தி கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

59. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30-12-1989 ஆம்

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் [1990 ஆகஸ்ட் 23

நாளிட்ட 691 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

60. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16–9–1989-ஆம் நாளிட்ட 703 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

61. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 5–2–1990-ஆம் நாளிட்ட 68-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

62. வடஆற்காடு மாவட்டம், சேத்துப்பட்டில் உள்ள ஷேம மறுவாழ்வு பயிற்சி மையத்தினரால் நடத்தப்படும் பயிற்சியின் போது தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16–2–1990-ஆம் நாளிட்ட 91-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

63. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30–9–1975 ஆம் நாளிட்ட II(1) வ.வ.ச.அ./854/75 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள் —சமய அறக்கட்டளைகள் துறையின் 13–3–1990-ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

64. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனைக்கு விதிக்கக் கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30–3–1990 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைச் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

[1990 ஆகஸ்ட் 23

65. திருச்சிராப்பள்ளி, திருவாளர்கள் புனித ஜோசப் அச்சக நிலையத்தினரால் அச்சுக் கட்டணமாக வசூலிக்கப்படும் தொகைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 4—4—1990 ஆம் நாளிட்ட 216 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

66. எந்த ஒரு விற்பனையாளராலும் விற்பனை செய்யப்படும் புகைப்படக் கருவிகள், புகைப்படத் தாள் மற்றும் சுருள்களுக்கு விதிக்கக்கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 9-5-1990 ஆம் நாளிட்ட 278 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

67. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் அட்டவணைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 8-6-1990 ஆம் நாளிட்ட 366 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

68. அண்ணா பல்கலைக்கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற் கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகசட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

69. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1984—85 ஆம் ஆண்டிற் கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகசட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

70. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1986—87 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றா வது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 23]

71. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

72. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1987–88-ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1984–85–ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

12. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை.

13. ஒன்பதாவது நிதிக் குழுவிற்கு தமிழக அரசு அளித்த குறிப்புத் தொகுதியின் சுருக்கமும், ஒன்பதாவது நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளும்.

14. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை, 1990–91.

15. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1990–91.

16. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1990–91.

17. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

18. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை) (ஐந்தாவது பட்டியல்).

சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS